04.11.2025

அ.வ.எண்.5/2021

வா.சா.1 - ராஜேஸ்வரி, க/பெ. வேல்முருகன்

Solemnly affirmed and sworn by Tmt.A.Santhi, Assistant on 04.11.2025 is accordance with the provision of Act X of 3331

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1. தாவா 2ம் அயிட்ட சொத்தில் 880 சதுரடி என குறிப்பிட்டுள்ளேன் என்றால் நினைவில்லை. வழக்குரையை காட்டி கேட்டபோது 880 சதுரடி என்று சாட்சியம் அளிக்கிறார். நீதிமன்ற ஆணையர் அறிக்கையில், 2ம் அயிட்ட சொத்தில் 956/5 காலை கிழமேல் வடபுறம் 20.4 மீ. ஆகவும், கிழமேல் தென்புறம் 20 மீ ஆகவும், தென்வடல் மேல்புறம் 10 மீ ஆகவும், தென்வடல் கிழபுறம் 9.6 மீ ஆகவும், ஆக மொத்தம் 2199 சதுரடி அல்லது 204.4 ச.மீ அளவுகளாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் வழக்குரையில் சொல்லியுள்ள அளவுகளுக்கும் வழக்கறிஞர் ஆணையர் அறிக்கையில் உள்ள அளவுகளுக்கும் முற்றிலும் மாறுபாடாக உள்ளது என்றால் சரியல்ல. தென்வடல் அளவு சரிதான், கிழமேல் 20 மீ என்பதும் சரிதான்.

2. சர்வேயர் வரைபடத்தில் தாவா 1 மற்றும் 2ம் அயிட்ட சொத்துக்கள் தவிர க.ச.எண்.956/3 காலையில் வேறு சொத்துக்கள் தனியாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.21 நத்தம் நிலவரி திட்ட தூய சிட்டா அடங்கலில் க.ச.எண்.956/3 ல் 56 சதுர மீட்டர் தனியாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.சா.ஆ.1 ல் TOPO வரைபடத்தில், க.ச.எண்.956/3 என்பது பொதுப்பாதையாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என்னுடைய வழக்குரையில் சொல்லியுள்ள 1 மற்றும் 2 அயிட்ட சொத்துக்கள் மற்றும் B அட்டவணையில் சொல்லியுள்ள சொத்துக்களும், வழக்கறிஞர் ஆணையர் அறிக்கை மற்றும் சர்வேயர் வரைபடத்திற்கும் நான் தாக்கல் செய்துள்ள கிரய மற்றும் தான செட்டில்மெண்ட் ஆகிய ஆவணங்களில் உள்ள அளவுகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றும், TOPO வரைபட அளவுகளுக்கும், என்னுடைய கிரைய ஆவண அளவுகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. எங்கள் ஆவணப்படி இருந்து வருகிறோம்.

3. வழக்குரையில் தாவா 1ம் அயிட்ட சொத்தில் விஸ்தீரணம், சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. பட்டா படி தான் சொல்லியுள்ளேன். பட்டா படி எனக்கு எவ்வளவு விஸ்தீரணம் பாத்தியம் என்றால் நினைவில்லை. தாவா 2ம் அயிட்ட சொத்தின் விஸ்தீரணம் என்ன என்றால் 880 சதுரடி என்று சொல்லியுள்ளேன். என்னுடைய வழக்குரை மற்றும் வா.சா.ஆ.2ல் மற்றும் 3 ஆவணத்தின் சொத்து விவரத்தில் 2ம் அயிட்ட சொத்து கருப்பசாமி இடத்திற்கும் வடக்கு, பழனிச்சாமி வீட்டிற்கும் தெற்கு, தென்வடல் தடத்திற்கும் கிழக்கு, தங்களது வீட்டிற்கு வடக்கு உள்ளது என்றும், மொத்தம் 880 சதுரடி என்று குறிப்பிடப்பட்டுள்ளதை நான் ஒப்புக்கொள்கிறேனா என்றால் சொத்தில் ஒரு மாதிரியாகவும், பட்டாவில் ஒரு மாதிரியாகவும் இருக்கும். எனவே மேற்படி ஆவணங்களில் சொத்து விவரத்தில் வேறுபாடு உள்ளது என்றால் சரியல்ல.

4. வா.சா.ஆ.2 1990 ம் ஆண்டு ஆவணத்தில், எனது தாயாருக்கு கிரயம் செய்தவர்கள் எனது உறவினர்கள் என்றும், மேற்படி இடம் பிதுர்ராஜ்ஜித வகையில் பாத்தியப்பட்டு நத்தம் பூமி என குறிப்பிட்டு கிரயம் செய்துள்ளார்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் கிரயம் வாங்கியது சரிதான். வா.சா.ஆ.2 ஆவணத்தை காட்டி கேட்டபோது எனக்கு தெரியவில்லை என்று சாட்சி, சாட்சியம் அளிக்கிறார். அது பட்டா பூமி ஆகும். மேற்படி நத்தம் பூமிகளுக்கு மூல ஆவணம் TOPO வரைபடம் என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. எனது வழக்குரை மற்றும் வா.சா.ஆ.1 ஆவணத்தில், சொத்து விவரத்தில் எனது மாதிரி வரைபடத்தில் உள்ளதுபோல் 1ம் அயிட்ட சொத்து இல்லைஎன்றும், ஆணையர் வரைபடத்தில் உள்ளதுபோல் 1ம் அயிட்ட சொத்து பிராது, மற்றும் ஆவணங்களில் உள்ளதுபோல் இல்லை என்றால் சரியல்ல.

5. அவ்வாறு தான் அளவுகள் உள்ளது என்றும், அதை தெரிந்துகொண்டு பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது வழக்குரை மற்றும் வா.சா.ஆ.1 ஆவணத்தில், தென்வடல் தடத்திற்கும் கிழக்கு என எந்த இடத்திலும் நான் சொல்லவில்லை என்றால் பட்டாவில் உள்ளது. என்னுடைய சொத்து மற்றும் பிரதிவாதியின் சொத்து குறித்து அரசு மூல ஆவணமான TOPO வரைபடம்

இல்லாமல் அளவுகளை யாராலும் சொல்ல முடியாது என்றும், ஆணையர் அறிக்கையில் TOPO வரைபடம் பற்றி எந்த விவரமும் இல்லாமல் நான் TOPO வரைபடம் தாக்கல் செய்யாமல் நான் தாக்கல் செய்துள்ளதால் இது பொய் வழக்கு என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் க.ச.எண்.955/3 காலையில் பொதுப்பாதை என உள்ளது என்றால் இல்லை. நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் உள்ள புகைப்படத்தில் உள்ளது என் வீட்டின் பின்புறம் என்றால் சரிதான். நான் அளக்கும்போது உடன் இருந்தேன். ஓடு நீட்டப்பட்ட இடத்திலிருந்து அளந்தார்களா அல்லது சுவற்றிலிருந்து அளந்தார்களா என்றால் சுவற்றிலிருந்து அளந்தார்கள். எனது வழக்கு பொய்யானது என்றும், பிரதிவாதி எந்த இடத்தையும் ஆக்கிரமிப்பு செய்யவில்லை என்றும், நான் பொதுப்பாதையை ஆக்கிரமிப்பு செய்து பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken down by me to open court read over to the witness and acknowledged by him / her to be correct

Sd./M.Santhosham
District Munsif, Sulur